கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 26 சனிக்கிழமை (11 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 15

# பூநகரி வெற்றி விடுதலைப் போரை மிக வேகமாக முன்னெடுத்துள்ளது

## தேசிய விடுதலை இயக்கத்தை மேலும் கட்டி எழுப்புவோம்

### தமிழீழ விடுதலைப் புலிகள் அறைகூவல்

யாழ்ப்பாணம், டிசம்பர் 11

தமிழீழம் என்ற தனியரசை நோக்கிய பாதையில் பூநகரி வெற்றி எமது விடுதலைப் போரை வேகமாக முன்னோக்கி உந்தித் தள்ளியுள்ளது;

இப்பெரு வெற்றியில் நாம் பறித்தெடுத்த ஆயுத பலத்துடன் ஆட்பலத்தையும் அதிகரித்து, எமது தேசிய விடுதலை இயக்கத்தைப் பலம் பொருந்தியதாகக் கட்டி எழுப்புவோம்.

எமது பலம் தான் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும், எமது இளைஞர்களும், யுவதிகளும் ஆயுதம் ஏந்தும்போதுதான் எமது பலம் பெருகும்,

இவ்வாறு, இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்குத் தமிழீழம் எங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கும் பூநகரி வெற்றி விழாவை ஒட்டி, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தில் இனி தாக்குதல் இல்லையாம்

### ஹமில்டன் உறுதிமொழி

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்தில் ஷெல் தாக்குதல் மற்றும் தாக்குதல்கள் இனி நடத்தப்படமாட்டாது என்று உறுதியளிக்கப்பட்டுள்ளதாம்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இது குறித்து நேற்று கொழும்பில் உறுதியளித்ததாக செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி திரு. பியட் சுவஸ்ஸர் தெரிவித்தார்.

வியாழக்கிழமை இரவு மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்தில்வீழ்ந்து வெடித்ததால், ஆஸ்பத்திரியில் தங்கியுள்ள நோயாளர்களும் ஊழியர்களும் பீதியடைந்திருந்தனர்.

இந்தத் தாக்குதல் குறித்து வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும், செஞ்சிலுவை சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடந்தன.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு அதிகாரி பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வன

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி பகுதி மீதான

## தாக்குதல்களை நிறுத்துமாறு அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயப் பகுதி மீது மேற்கொள்ளப்படும் ஷெல் மற்றும் தாக்குதல்களை உடன் நிறுத்தக் கோரி ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் செல்வி ந. கனகரத்தினம் சுகாதார அமைச்சருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரிப் பகுதியில் வீழ்ந்த செல்லினால் வைத்திய விடுதியில் இருந்த டாக்டர் ஒருவர் காயமடைந்துள்ளதுடன் ஆஸ்பத்திரிக் கூரை ஓடுகள், ஜன்னல் கண்ணாடிகளும் சேதமடைந்துள்ளன என்றும் –

இந்தச் சம்பவத்தால் ஆஸ்பத்திரி ஊழியர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர் என்றும்—பணிப்பாளர் சுகாதார அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஓ-15-17)

## பின்னடைவுகளைத் தவிர்க்க

## படையினருக்குவிசேட யுத்தப் பயிற்சி!

யாழ்ப்பாணம், டிச. 11

அண்மையில் புதிதாக இராணுவத்தில் சேர்க்கப்பட்ட 10 ஆயிரம் பேருக்கும், மற்றும் தற்போது சேவையில் இருக்கும் இராணுவத்தினருக்கும் விசேட யுத்தப் பயிற்சி வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த விசேட பயிற்சி இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போதிய பயிற்சி அளிக்கப்படாமல் வடக்கு கிழக்கு யுத்த முனைகளுக்கு அனுப்பப்பட்ட படையினரால் ஏற்பட்ட பிரச்சினைகள், பின்னடைவுகள் போன்றவற்றைத் தவிர்க்கும் நோக்கில் அந்த விசேட பயிற்சி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படுவதாக இராணுவ உயர்பீடம் தெரிவித்துள்ளது. (இ-5)

## யாழ் பல்கலைக்கழக மாணவரின்

## மகாபொல உதவித்தொகை இரு மடங்காக அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்கு தற்சமயம் வழங்கப்பட்டு வரும் மாகாபொல உதவித்தொகை இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட உள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் தலைவருக்கும் இடையில் கொழும்பில் நடந்த பேச்சுக்களின் போது இந்த விடயம் குறித்து இணக்கம் காணப்பட்டுள்ளதாக மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கொழும்பு சென்றிருந்த மாணவர் அமைப்புப் பிரதிநிதிகளுக்கும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் பண்டிதரத்தினாவுக்கும் இடையில் நடந்த சேச்சுகளின் போது

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ம.எண்ணெயுடன் 'மார்கோ' இன்று இங்கு வந்து சேரும்

யாழ்ப்பாணம், டிச. 11

யாழ். மாவட்டத்துக்கென 4 ஆயிரத்து 500 பரல் மண்எண்ணெயுடன் 'மார்கோ' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கப்பலில் தபால் பொதிகள் எடுத்து வருவதாக முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நேற்றுக் கிடைத்த தகவலின்படி தபால் பொதிகள் வருவது சந்தேகம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கப்பலில் செஞ்சிலுவைப் பிரதிநிதி எவரும் வராததால், தபால் பொதிகள் எடுத்து வரப்படமாட்டா என்று நேற்று மாலை தெரிய வந்தது. (ஓ-3)

## கிளிநொச்சி பகுதியில் நேற்று விமானக் குண்டுவீச்சு தாக்கு

### பொதுமக்கள் பலர் காயம், கட்டடங்கள் சேதம்

ஸ்ரீலங்கா விமானப் படையின் புக்காரா, சியாமாசெட்டி ஆகியனவும், ஹெலி ஒன்றும் நேற்றுக் காலை 8 மணியளவில் கிளிநொச்சி பகுதியில் கூட்டாக தாக்குதலை நடத்தின. இத்தாக்குதலினால் இருவர் படுகாயமடைந்தனர். ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை நடைபெறும் பாடசாலை ஒன்றும் சில வீடுகளும் கட்டடங்கள் சிலவும் சேதமடைந்தன.

இந்தக் கண்மூடித்தனமான தாக்குதலில் ஆறுமுகம் இந்திராணி என்ற பெண் படுகாயமடைந்துள்ளார்.

குண்டுவீச்சு இடம்பெற்ற சமயம் பரீட்சை நிலையத்தில் கூடியிருந்த பெரும் எண்ணிக்கையான பரீட்சார்த்திகளும், பரீட்சை மேற்பார்வையாளர்களும் மண்டபங்களை விட்டுச் சிதறி ஓடினர்.

அப்பகுதியில் அரிசி ஆலை ஒன்றும், அரச கட்டடமும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய காலைத் தாக்குதலின் பின் முற்பகல் 10 மணியளவில் மீண்டும் வந்த புக்காரா விமானம் ஒன்று அதே பகுதியில் றொக்கட் தாக்குதலை நடத்தியது. றொக்கட் தாக்குதலுக்கு இலக்காகி மூவர் காயமடைந்தனர்.

றொக்கட் தாக்குதலை நடத்திய புக்காரா விமானத்தை நோக்கி விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தினர். அதனை அடுத்து விமானம் திரும்பிச் சென்றது.

மாதகலில் இருந்து இடம்பெயர்ந்த நாகமுத்து (வயது 50), அப்பையா மல்லிகா (வயது 19), வடிவேல் புவினா (வயது 20) ராம்குமார் சுதர்சன் (வயது 8), சுகிலன் (வயது 13) ஆகியோர் நேற்றைய தாக்குதல்களில் காயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## சுதந்திர கட்சியின் அழைப்பை தமிழ்க் கட்சிகள் நிராகரிப்பு

கொழும்பு, டிச. 11

வடக்கு – கிழக்கு யுத்தத்துக்கு விரைவில் முடிவு காணுமாறு அரசாங்கத்தை வற்புறுத்து முகமாக சுதந்திரக் கட்சி நடத்தவிருக்கும் தொடர் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்படி விடுக்கப்பட்ட அழைப்பை கொழும்பில் உள்ள முக்கிய தமிழ் கட்சிகள் நிராகரித்து விட்டன.

இனப்பிரச்சினைக்கான தீர்வை சுதந்திரக்கட்சி இதுவரை சமர்ப்பிக்கத் தவறிவிட்டது என்று தமிழ்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

சுதந்திரக்கட்சி விடுத்த அழைப்பை தமிழ்க் கட்சிகள் நிராகரித்திருப்பதானது, தமிழ்க் கட்சிகளின் நம்பிக்கையீனத்தையே வெளிப்படுத்தி இருப்பதாக பி.பி.ஸி அறிவித்தது.

தாம் தொடர் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு முன்பாக சுதந்திரக் கட்சி அரசியல் தீர்வுக்கான தமது யோசனையை வெளியிடவேண்டுமென்று ஈ. பி. ஆர். எல். எப். கட்சி கோரியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் அழைப்பை நிராகரித்துள்ள

(3 ஆம் பக்கம் பார்க்க )

## பூநகரி வெற்றி விழா இன்று ஆரம்பமாகிறது

### 3 நாட்கள் கொண்டாட ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 11

பூநகரி — நாகதேவன்துறை கூட்டுத்தளம் தகர்ப்பு வெற்றித் தாக்குதலின் ஒரு மாதப் பூர்த்தி வெற்றி விழாவாக இன்று முதல் மூன்று தினங்கள்—தமிழீழ மக்கள் கொண்டாடுவர்.

பூநகரி வெற்றித் தாக்குதலை வெற்றி விழாவாக—எழுச்சி விழாவாக — கொண்டாடும் வகையில் வீதிகள் சிவப்பு-மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

சந்திகளில் பூநகரி வெற்றியைச் சித்திரிக்கும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

வெற்றி விழாவையொட்டி மூன்று தினங்களும் பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெற்றிக்களிப்பை வெளிப்படுத்தும் வெற்றித் தீபங்கள் தாங்கிய ஊர்வலம் நேற்று மாலை நல்லூரில் இருந்து பெருமாள் கோவில் வரை நடத்தப்பட்டது. ஏராளமான மாணவர்கள் இதில் உணர்வு பூர்வமாகப் பங்கேற்றனர். (ஓ-3-15-162)

## மட்டுவிலில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 11

பூநகரி வெற்றி விழாப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு மட்டுவில் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

அணிவகுப்பு நிகழ்ச்சியும் இடம்பெறும். (ஓ-3)

## படகுச்சேவை நடைபெறாது

யாழ்ப்பாணம், டிச. 11

கிளாலி — பூநகரி படகு சேவை இன்று முதல் மறு அறிவித்தல் வரை நடைபெறமாட்டாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## மாகாணசபை உறுப்பினர் காணாமற்போய் விட்டார்

கொழும்பு, டிச. 11

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தென் மாகாண சபை உறுப்பினர் விமல் பிரான்சிஸ்கு என்பவர் காணாமற்போய் விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தென் மாகாண சபையின் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்ட பின்னர் நேற்று முன்தினம் முதல் அவரைக் காணவில்லை என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் மஹிந்த அமர வீரா பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

இதேவேளை —

திரு. பிரான்ஸிஸ்குவின் மனைவிக்கு இனந்தெரியாத தொலைபேசி செய்தி ஒன்று கிடைத்ததாகவும், தமது கணவன் பற்றிய எண்ணங்களைக் கைவிடுமாறு அதில் அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

உறுப்பினர் காணாமற்போயிருப்பதைத் தொடர்ந்து தென் மாகாண சபையின் நடவடிக்கைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

## 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்:

## கந்தையா வித்தியாசாலை மாணவன் முதலிடம்

கொழும்பு, டிச. 11

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கொழும்பில் வெளியாகியுள்ளன.

16 ஆயிரத்து 805 மாணவர்கள் சிங்கள மொழி மூலமும் —

3 ஆயிரத்து 750 மாணவர்கள் தமிழ்மொழி மூலமும்— சித்தியடைந்துள்ளனர்.

தமிழ் மொழி மூலம் சித்தி அடைந்தோரில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி. பிரகாஷ் 190 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ஓ-3)

## தெற்கில் சேகரிக்கப்பட்ட பொருள்கள் வடக்கே வந்தன

### பூநகரி முகாமுக்கும் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 11

உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட 28 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நேற்று கொழும்பில் இருந்து அனுரதபுரத்துக்கு அனுப்பப்பட்டன.

20 லொறிகளில் அனுப்பப்பட்டுள்ள உணவு, மருத்துவ உபகரணங்கள், துணிகள் போன்ற பொருள்கள் பூநகரி மற்றும் படை முகாம்களுக்கு நேற்று அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## நேற்று மனித உரிமைகள் தினம்:

# கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள்; போர் வேண்டாம் என்று கோஷம்!

### பெரும் எண்ணிக்கையான பெண்கள் கலந்து கொண்டனர்

கொழும்பு, டிச. 11

இலங்கை மனித உரிமைச் சங்கங்களின் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் நேற்றுக் கொழும்பில் நடைபெற்றன.

நாட்டின் தூர இடங்களில் இருந்து இதில் பலர் பங்கெடுத்தனர். அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவர்.

மனித உரிமைகள் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் ஒரு வகை போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக மாறியது. பெண்கள் போருக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

''வேண்டாம் வேண்டாம் எங்களுக்கு வேண்டாம் இந்தப் போர் எங்களுக்கு வேண்டாம் உயிர்களை காவு கொள்ளும் இப்போர் எங்களுக்கு வேண்டாம்'' — என்ற கோஷங்களைப் பெண்கள் எழுப்பினார்கள்.

''போருக்குப் போவதும் எங்கள் பிள்ளைகள். போரில் மடிவதும் எங்கள் பிள்ளைகள் விடுதலைப் புலிகளும் மனிதர்கள் தான். மனிதர்கள் மனிதர்களைக் கொல்வதில் அர்த்தமில்லை எனவே நாம் இப்போரைக் கண்டிக்கிறோம்.

''ஆட்களைக் கொல்வதின் மூலம் எதையும் வெற்றி காணுவது பிழை என நாம் நம்புகின்றோம். எனவே இது சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டிய விஷயம். அரசியல் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக இப்போர் பயன்படுத்தப்படுகிறது என்பது எமக்குத் தெளிவாகத் தெரிகிறது'' — என்றார் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட புத்தள என்னுமிடத்தைச் சேர்ந்த சீலாவதி என்ற பெண்.

முர்சர்தீ மாவி



இப்படி எத்தனை உறுதி மொழியையும், ... கதையையும் ... புதியது எத்தனை ... நிலைக்குதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பொமலேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கியவை. தொடர்பு கொள்ளவும்: J. J. இராஜசிங்கம், இல. 9, பிளைச்சர் ஒழுங்கை (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில்), சுண்டிக்குளி. (28370)

பிரசித்திபெற்ற ஆண்கள், பெண்கள் கல்லூரிகளுக்கு மத்தியில் இரண்டு படுக்கை அறைகளுடன் சகல வசதிகள் அடங்கிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 'மனோவாசா'' சின்னப்பிள்ளையார் கோயில் வீதி, V. M. றோட், பருத்தித்துறை. (28375)

திறமான Drawing Room Suites, கட்டில்கள், சாப்பாட்டு மேசை, கதிரைகள், அலுமாரி, தண்ணீர் இறைக்கும் றொபின் இயந்திரம், ஸ்போட்ஸ் கப்ஸ். ஷண், இல. 387, கோவில் வீதி, நல்லூர். 10-30க்கு முன் 2-30க்கு பின். (28374)

### உடன் விற்பனைக்கு

அடைவைப்பதற்கு உகந்த சில்கி, போலிஸ், காப்பிலி பன்ரம், யாவா பன்ரம், பாபடிக்கல்ஸ், கங்கேரியன் பிராமா முட்டைகளும் பத்து நாட்கள் கொண்ட போலிஸ், கங்கேரியன் பிராமா குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. 70/6, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (28376)

### மலிவு விற்பனை

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இலவசமாக நேர அட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-6584)

### வெளிவந்துவிட்டன

ஆண்டு 9 கணக்கியல் மாணவர்களுக்கான கணக்கீடு கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழுக்கான பயிற்சி நூல். ஆண்டு 11—10 வகுப்புக்களுக்கான வர்த்தகம் வினா-விடைத் தொகுப்பு. இரண்டு புத்தகங்களையும் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். ஆக்கம்: த. தர்மராஜன். (28342)

### மணமகன் தேவை

29 வயது, சித்திரை (4), 8இல் செவ்வாய், கிரகபாவம் 54½, படித்த, சிவந்த அழகான பெண்ணுக்கு பட்டதாரி, வங்கி, T.A. விரிவுரையாளர் தரத்தில் மணமகன் தேவை. சனி, ஞாயிறு தினங்களில் நேரில் வரவும். ப. ஸ்ரீபதி, அனுமதிபெற்ற விவாகப் பொருத்துனர், விக்னேஸ்வரா ஒழுங்கை, இணுவில் தெற்கு, இணுவில். (6846)

24-9-1951இல் பிறந்த நட்சத்திரம் மகம், 1ஆம் பாதம், கருக்கெழுத்து, தட்டெழுத்து படித்த பெண்ணுக்கு 50 வயதிற்குட்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் அல்லது சொந்த வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. தாரமிழந்தவரும், விவாகரத்து செய்தவரும் விண்ணப்பிக்கலாம். 922, மே/பா உதயன். (6840)

### தேவை

கோண்டாவில் மேற்கில் வீட்டில் வந்து கற்பிக்கக்கூடிய ஆங்கில ஆசிரியர் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்: இல. 923, மே/பா உதயன். (சி-6590)

### வங்கிப் பரீட்சை

வங்கிப் பரீட்சைக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. Spoken English with Grammarஉம், ஆரம்பம்: 12-12-93 காலை. V. N. கந்தசாமி, 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்கு சமீபமாக), கொக்குவில். (6842)

### ENGLISH

Spoken English with Grammar G.A.Q. (E S.L.) 94, Special English Grammar Classes ஆகியவற்றிற்குரிய விசேட ஆங்கில வகுப்புகளின் புதிய பிரிவுகள் (11-12-93) சனிக்கிழமை ஆரம்பமாகின்றன. இ. சிவலிங்கம் (Dip-in- Eng.), புதிய ஆங்கில கல்வி நிலையம், 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் யாழ்ப்பாணம். (சி-6589)

### ஆசிரியர் இல்லை

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் க. பொ. த. உயர்தர உயிரியல் விஞ்ஞானப் பிரிவு வகுப்புகளுக்கான ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் இப்பாட நெறியை தொடர முடியாமல் உள்ளதாக பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

விலங்கியல் பாடம் தவிர ஏனைய பாடங்கள் வகுப்பில் நடத்தப்படுவதில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-117)

---

வடபிராந்திய

## சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

## முக்கிய அறிவித்தல்

வடபிராந்தியத்தில் வதியும் எமது தொழிலாளர்கள், நிலைய உரிமையாளர்கள், கிராமியத் தொழிலாளர்கள் அனைவரும் தங்கள், தங்கள் கிளைச்சங்கங்களில் உறுப்பினராவதை உறுதிப்படுத்தும் 'உறுப்பினர் சான்றுப் படிவத்தை' கிளைச் சங்கங்களிடமும் சமாச அலுவலகத்திலும் பெற்று நிரப்பி ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு: 01-01-1994ற்கு பின்னர் ''சான்றிதழ் அட்டை' பெறாது தொழில் புரிவது சங்கங்களின் சட்ட 'நடவடிக்கைக்குரியதொன்றாக கருதப்படும்.

★ அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களும் 22-12-93 புதன்கிழமை திறக்கப்பட்டு 25-12-93 சனிக்கிழமை (நத்தார் பண்டிகை) அன்று மூடப்படவேண்டும் என்பதை அறியத்தருகின்றோம்.

ச. அன்ரன் இராசநாயகம்,
செயலாளர்.

வடபிராந்திய
சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்.
18 ஏ, இராசாவின் தோட்ட லேன்,
யாழ்ப்பாணம். (28363)

---

# வெற்றி நாள்

இந்நாளில்

## வித்தாகிய வேங்கைகளின்

ஆத்ம சாந்திக்+ க

எல்லாம் வல்ல நல்லூர் முருகனைப் பிரார்த்திக்கின்றோம்

சாந்தி!

தமிழீழ மகன்

[28364]

---

## நல்லூர் பிரதேசசபை - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல் - 1994

கீழ்க்காணும் இறைச்சிக் கடைகளுக்கு முன்னைய நிபந்தனைகளுக்கமைய என்னால் கேள்விகள் மீளவும் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் யாவும் நல்லூர் பிரதேசசபை செயலாளரால் கேள்வி வைப்பு பணம், பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 16-12-1993 நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் 17-12-1993 காலை 10-00 மணிவரை என்னால் ஏற்று கொள்ளப்பட்டு, கேள்விப்பத்திரங்கள் 17-12-1993 காலை 11-00 மணிக்கு நல்லூர் பிரதேசசபை தலைமைக் காரியாலயத்தில் வைத்து திறக்கப்படும்.

| குத்தகை விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு பணம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1. நாவலடி அரியாலை மா. இ. கடை | 200/- | 1000/- | 5750/- |
| 2. இணுவில் மஞ்சத்தடி மா. இ. கடை | 200/- | 3000/- | 20000/- |
| 3. கோண்டாவில் ஸ்ரேசனடி மா. இ. கடை | 200/- | 500/- | 3500/- |

சோ. கிருஷ்ணதாசன்,
செயலாளர்,
விசேட ஆணையாளருக்காக.

நல்லூர் பிரதேச சபை பணிமனை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
08-12-1993

[illegible]

---

## WANTED TEACHERS
## ST. PATRICK'S COLLEGE JAFFNA

A Full Time Teacher for
- ★ Primary (Yrs. 1 — 5)
- ★ Tamil for O/L and A/L Classes

Retired Trained Teachers will also be Considered

Apply before 17 - 12 - 1993 Please quote Ref. No. 91293.

- RECTOR.

[C-6683]

---

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி புஷ்பவதி சோமாஸ்கந்தன் (பபா)

திருமதி புஸ்பவதி சோமாஸ்கந்தன் (பபா) கொழும்பில் காலமானார். அன்னாரின் மறைவால் ஆழ்ந்த துயரமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம்.

அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரின் பிரிவால் வாடும்:
சோ. யோகநாதன் குடும்பம்

24, விதானை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (28372)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 — 05 — 1927

உதிர்வு: 22 — 11 — 1992

நயினை நிறைபெருந் திருவினர்

### வேலாயுதம் வீரவாகு

(V. S. K. Stores, வவுனியா)

திதி: 11 — 12 — 1993


அன்பின் அணிகலம், பண்பின் உறைவிடம்,
அமைதியின் அணிகலமான எம் தலைவர்
பிரிந்து ஓராண்டு சென்றாலும்
பல்லாண்டு எம் உளத்திலே வாழ்கின்றார்.

— குடும்பத்தினர்.

55/44, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (28355)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சிதம்பரப்பிள்ளை கதிரவேல்

தோற்றம்: 23 — 11 — 1927

மறைவு: 22 — 11 — 1992

திதி: 11 - 12 - 1993

குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எம் அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும், உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

''கங்காசுதம்''
ராச வீதி,
திருநெல்வேலி. [28365]

---

வட இலங்கை

## தொழில் நுட்பக்கல்லூரி

## புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள்

## INTRODUCTION TO COMPUTER AND BASIC LANGUAGE

### ஆரம்பம்: 14-12-1993

இத்துடன்
1) Word Processing
2) Spread Sh et
3) Graphics
4) Communication
5) Data Base கான மேலதிக செய்முறைப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

காலை மாலை வார நாள் வகுப்புகள்

விவரங்கட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETERS'S LANB,
JAFFNA.

(சி-6593)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A/L 93 இல் பரீட்சை எடுத்த மாணவருக்கான

## DAY CLASS

**14-12-93** செவ்வாய் காலை 8 மணிக்கு

- பொருளியல்:— திரு. க. கலாகரன்
- கணக்கியல்:— திரு. S. K. பிரபாகரன்
- வர்த்தகம்:— திரு. தி. வரதன்
- அளவையியல்:— திரு. A. பிரபாகரன்

குறிப்பு:-
✲ பாடத்திட்டமும், வினா விடைகளும் இணைந்த துரித மீட்டல் செய்யப்படும்.

(சி/6692)

---

## ஆண் எழுதுவினைஞர் தேவை


தமிழ் / ஆங்கிலத்தில் நன்கு தட்டெழுத்துச் செய்யும் அனுபவமும், கடிதங்கள் எழுதக் கூடியவருமான ஓர் ஆண் எழுது வினைஞர் தேவை. ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை எதிர்வரும் 21 - 12 - 93 க்கு முன்னர் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர்,
வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்,
10, சம்பியன் வீதி,
கொக்குவில்.

(சி-6684)

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்தலும்



### அமரர் சின்னையா பத்மராசா

(எஸ். பத்மராசா அன் சன்ஸ், நகைத் தொழிலகம், சங்கானை)

மலர்வு; 17—11—1947

உதிர்வு: 12—11—1993

எமது அன்பு நிறைந்த அருமை மிகுந்த எமது தலைவர் சின்னையா பத்மராசா அவர்கள் 12-11-1933 இல் திடீரென இறைபதமெய்தி எம்மையெல்லாம் திகைப்பிலும் மனவேதனையிலும் ஆழ்த்தியிருந்தபோது, அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (12-12-1993) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எமது தலைவனின் 31 ஆவது நாள் நினைவஞ்சலி, அந்தியேட்டி, வீட்டுக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்

''கோகுலவாசம்''
77, பிரதான வீதி,
சங்கானை. (28377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## பாதுகாப்பு வலய தாக்குதல்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மட்டுமன்றி, வட மாகாணம் முழுவதற்குமே பிரதான ஆஸ்பத்திரியாக விளங்குவது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை — யாழ். பெரியாஸ்பத்திரி. அந்த முக்கியத்துவத்தைக் கருதியே, போரினால் பாதிக்கப்படும் மக்களுக்குச் சிகிச்சை அளித்துக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்குடன், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஆஸ்பத்திரியின் பாதுகாப்பைப் பெறுப்பேற்றது.

ஆஸ்பத்திரியின் பாதுகாப்புச் சம்பந்தமாக முத்தரப்பு— விடுதலைப் புலிகள், அரசாங்கம், செ. ச. சர்வதேசக் குழு— இணக்கம் ஒன்று காணப்பட்டது. அந்த இணக்கத்தின் பிரகாரம் வகுக்கப்பட்ட சில விதிமுறைகளை அனுசரித்து நடக்க வேண்டிய கடப்பாடு போரில் ஈடுபட்டுள்ள இருசாராருக்கும் உண்டு.

ஆனால் அரசாங்கப்படைகள் விட்டு விட்டு, இருந்திருந்தாற் போல, இணங்கப்பட்ட விதிகளை மீறி ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்திற்குள் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

பூநகரியில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பேரழிப்புக்குப் பின்னர் கடந்த ஒருமாத காலமாக எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமான தமிழ் மக்களைக் கொல்லமுடியுமோ அந்தளவுக்குக் கொன்று விடுவது என்ற கொதிப்புடன் படையினர் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். மக்கள் கூடும் இடங்களான தேவாலயங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், சந்தைகள், செயலகங்கள் என்று தேர்ந்து எடுத்துத் தாக்கி வருகிறார்கள்.

அந்த வரிசையில் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பிரதேசத்தையும் படையினர் விட்டு வைக்கவில்லை. அங்கு அடுத்தடுத்து இரண்டு நாட்கள் இரவு நேர எறிகணைத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர்.

பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டு, எறிகணைத் தாக்குதல்களை நடத்திவிட்டு, தாம் சற்றும் பிசகாமல் விடுதலைப் புலிகளின் இலக்குகளைத் தாக்கியதாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கு அறிக்கை விடுபவர்கள் ஸ்ரீலங்காப் படையினர்.

ஆகவே ஆஸ்பத்திரி பெரியாஸ்பத்திரியை அண்டி, பாதுகாப்புப் பிரதேசத்தில் நடத்திய குண்டு, எறிகணைத் தாக்குதல்கள் இலக்கு வைத்தே திட்டமிட்டே நடத்தப்பட்டவை என்று கொள்ளலாம். அதாவது சர்வதேச நிறுவனம் ஒன்றுடன் இணங்கப்பட்ட விதிமுறைகளை மீறி ஆஸ்பத்திரியை நோக்கி மீது அரச படையினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்!

இதனை வெறுமனே, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்த நாயின் கதையாக மட்டும் கருதமுடியாது. இது ஓர் உள்நோக்கத்துடன் செய்யப்படும் காரியம். யாழ். பெரியாஸ்பத்திரி பாதுகாப்புப் பிரதேசத்தைப் பேணுவது என்ற முத்தரப்பு இணக்கத்தை முறிப்பதற்கான திட்டமிட்ட சதி.

அடுத்தடுத்து ஆஸ்பத்திரிப் பிரதேசத்தில் தாக்குதல் நடத்தி செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு கோபமூட்டுவதன் மூலம், அவர்களை பெறுப்பேற்ற பணியிலிருந்து விலகிச் செல்லத் தூண்டுவது.

இந்தப் பணியிலிருந்து அவர்களை விலகிப் போகச் செய்து விட்டால், அரசாங்கப் படைகள் குடா நாட்டில் செய்யும், இனிச்செய்யப் போகும் அக்கிரமங்களை மூன்றாமவர் எவரும் கண்டு கொள்ளும் வாய்ப்பில்லாது போகும், அதன் பின்னர் தமது இராணுவத் திட்டங்களைத் தீவிரப்படுத்தி மனம்போன போக்கில் தமிழர்களைச் ''சாட்சி'' யின்றிக் கொன்றொழிக்கத் தாராள லைசென்ஸ் கிடைத்த மாதிரியாகி விடும் என்பதே அந்தச் சதியாகும்.

செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவுக்கும் இது புரியும் என்று நம்புகிறோம்.

# யூத ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸாருடன் மோதல்

## ஸ்பெயினில் அரபாத் - பெரேஸ் சந்திப்பு

ஜெருஸலம், டிச. 11

ஜெருஸலத்தில் யூத ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இஸ்ரேல் பொலீஸாருக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

யூதக் குடியிருப்பைச்சேர்ந்த ஒருவரை பலஸ்தீனர்கள் சுட்டுக் காயப்படுத்திய சம்பவத்தை அடுத்து யூதர்கள் பாதைகளைத் தடுத்து, வீதிகளில் ரயர் போட்டு எரித்தனர் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலீஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று பலஸ்தீனர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட உள்ள காஸாவிலும் பலஸ்தீனர்கள் யூதர்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜெருஸலம் பலஸ்தீனர்களினதும் யூதர்களினதும் பொதுவான தலைநகரமாக இருக்க வேண்டும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் கோரி வருகிறது. இஸ்ரேல் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

தற்போதைய இஸ்ரேல் — பலஸ்தீன பேச்சுக்களில் ஜெருஸலத்தின் எதிர்காலம் பற்றிய நிகழ்ச்சி நிரல் சேர்க்கப்படவில்லை என்று இஸ்ரேல் தெரிவிக்கிறது.

இதற்கிடையில், பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான முரண்பாடுகள் குறித்து பேசுவதற்காக பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத்தும் இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் சிமொன் பெரெஸும் தென் ஸ்பெயினில் உள்ள கிறெனடாவில் நேற்று முன்தினம் சந்திக்க இருந்தனர். (இ-க)

## பிலிப்பீன்ஸ் சூறாவளி; இறந்தவர் எண்ணிக்கை 258!

கடந்த வார இறுதியில் பிலிப்பீன்ஸில் வீசிய சூறாவளி காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 258 ஆக அதிகரித்ததாக அறிவிக்கப்படுகிறது.

மேலும் 11 பேர் காணாமற் போய் விட்டனர் என்றும் சிவில் பாதுகாப்பு அலுவலகம் தெரிவித்தது.

இதேவேளை —

மேலும் ஒரு புயல் பிலிப்பீன்ஸைத் தாக்கலாம் என்று வளிமண்டல ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். (த-எ-6)

# ஐ.நா. பொதுச் செயலாளர் வட கொரியா விஜயம்!

வடகொரியாவுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி இம்மாதம் விஜயம் செய்யவிருக்கிறார்.

வடகொரியாவுக்கு விஜயம் செய்யும் முதலாவது ஐ.நா. பொதுச் செயலாளர் என்ற பெருமை இவருக்குக் கிடைக்கிறது.

வடகொரியாவில் உள்ள அணு ஆலைகள் மற்றும் ஆய்வு நிலையங்களை சர்வதேச ஆராய்ச்சிக் கமிஷனின் பரிசோதனைக்கு உட்படுத்த அந்த நாட்டு அரசு மறுத்து வருவதைத் தொடர்ந்தே, ஐ.நா. பொதுச் செயலாளர் விஜயம் ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. (த-எ)

# "வைடர்" நிறுவனத்திடம் சந்திரிகா பெற்ற பணம்!

## அரசியல் வட்டாரங்களில் சர்ச்சை

பேராசிரியர் எஸ். ஜே. தம்பையா எழுதிய பௌத்தம் காட்டிக் கொடுத்தது என்ற நூலுக்கு நிதியுதவி அளித்த பின்லந்து நாட்டைச் சேர்ந்த 'வைடர்' நிறுவனத்திடமிருந்து தமது ஆராய்ச்சிப் பணிக்காக மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவும் பணம் பெற்றார் என்ற விஷயம் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ஆளும்கட்சி எம். பியான புதிக குருகுலரத்தினா அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசியபோது— 'வைடர்' நிறுவனத்திடம் இருந்து சந்திரிகாவும் 45 ஆயிரம் டொலரை பணமாகப் பெற்றிருந்தார் என்று தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக பிரசாரத்தை மேற்கொள்வதற்கு 'வைடர்' நிறுவனம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டுள்ளதாகவும் திரு. குருகுலரத்தினா தெரிவித்திருந்தார்.

அப்படிப்பட்ட நிறுவனத்திலேயே சந்திரிகாவும் வேலை செய்தார் என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது பற்றி விசாரிப்பதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் அரசாங்கத்தைக் கோரியிருந்தார்.

இக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து அறிக்கை ஒன்றை சபாநாயகருக்கு முதலமைச்சர் சந்திரிகா அனுப்பிவைத்திருக்கிறார்.

பின்லந்து 'வைடர்' நிறுவனத்தில் தாம் பணியாற்றியதை ஒப்புக்கொண்ட சந்திரிகா, வஞ்சகமாகத் தான் பணம் எதையும் பெறவில்லை என்று அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

''தென்பகுதியில் குறித்த காலப் பகுதியில் நிலவிய பயங்கரவாத நெருக்கடியில் இருந்து உயிர்தப்புவதற்கு குழந்தைகளுடன் நான் வெளிநாடு சென்றேன். அச்சமயம் எனது ஜீவனோபாயத்துக்காக தொழில் ஒன்றைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதனால் 1988 நவம்பர் முதல் 1991 வரை 'வைடர்' நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் விவசாய பொருளாதாரம் அரசியல் விஞ்ஞானம் சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தயாரித்து வந்தேன் என்று அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (த-எ-6)

### மீண்டும் ஆரம்பம்

பருத்தித்துறை நகரசபை பொதுநூல் நிலையத்தில் நூல்கள் இரவல் கொடுப்பது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-173)

### மரம் வழங்கல்

யாழ். மாவட்ட காட்டுத் திணைக்களத்தினர் பெருமளவு மரக் கன்றுகளை தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வழங்கியுள்ளனர்.

இம் மரக் கன்றுகள் இப்பகுதியில் உள்ள அகதி முகாம்கள், அரச, உள்ளூராட்சி மன்ற அலுவலகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (க-117)

# வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டால் நாடும், வீடும் தன்னிறைவு பெறும்

*வதிவிட வேளாண்மையை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களாக வதிவிட வேளாண்மைப் போட்டிகளை நடத்தி வருகின்றது. வதிவிட வேளாண்மையின் பலாபலன்களை இக் கட்டுரை விளக்குகின்றது.*

ஒவ்வொரு குடும்பமும் தமது வதிவிடத்தில் வீட்டுத் தோட்ட மரக்கறிச் செய்கையுடன் பழப்பயிர், விலங்கு வேளாண்மை, தேனீ வளர்ப்பு என்பவற்றையும் ஒருங்கிணைத்து மேற்கொள்வதே வதிவிட வேளாண்மை எனப்படும். இந்த வதிவிட வேளாண்மையை யாழ். மாவட்டத்தில் நல்ல முறையில் மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். ஒரு நாட்டின் உற்பத்தித் தன்னிறைவு ஒரு வீட்டின் உற்பத்தித் தன்னிறைவில்தான் ஆரம்பிக்கின்றது. ஒவ்வொரு வீடும் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் போது முறையே கிராமம், மாவட்டம், நாடு ஆகியவையும் தன்னிறைவு எய்தும்.

ஆகவே இச்சந்தர்ப்பத்தில் வதிவிட வேளாண்மையினால் ஏற்படும் நன்மை பற்றியும் அறிதல் சாலச் சிறந்ததாகும். அவையாவன;

★ சுத்தமான போஷாக்கு நிறைந்த காய்கறிகளைப் பெற வசதியாகவிருக்கும்.

★ தரத்திற் சிறந்த, பூச்சி நாசனி பயன்படுத்தாத, நச்சுத்தன்மையற்ற, புதிய மரக்கறி வகைகளைப் பெற்று நிறையுணவை தயாரித்துக் கொள்ள முடிவதனால் குடும்ப அங்கத்தவர்களின் உடல் நலத்தைப் பேண முடியும்.

★ மரக்கறிக்குச் செலவிடப்படும் பணம் மீதப்படுத்தப்படுகின்றது.

★ எமக்குத் தேவையான மரக்கறிகளை நாமே உற்பத்தி செய்கின்றோம் என்ற மன நிறைவைப் பெறுகின்றோம்.

★ விவசாயம் சம்பந்தமான தொழினுட்ப அறிவை குடும்பத்தில் உள்ளோர் வளர்க்க முடிகின்றது.

★ கிடைக்கும் ஓய்வு நேரத்தை உபயோகமான வழியில் பயன்படுத்த முடிவதுடன், உடற்பயிற்சியும் கிடைக்கின்றது.

★ வீட்டுக் கழிவுப் பொருள்களைப் பசளையாக பாவிக்க முடிகின்றது. உதாரணமாக குப்பை, கூளம், சாம்பல்.

★ வீட்டுச் சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருக்க முடிகின்றது.

★ மேலதிகமான மரக்கறிகளை விற்பனை செய்து சிறு தொகைப் பணத்தைப் பெற முடிகின்றது.

★ பண்டைமாற்று முறைகளையும் கையாளக் கூடியதாக இருக்கின்றது.

★ சந்தையில் மரக்கறிகளின் விலை குறைவடைகின்றது. இதனால் நுகர்வோரின் வீட்டுச் செலவின் ஒரு பகுதி மீதப்படுத்தப்படுகின்றது.

★ சூழல் மாசுபடுவதைத் தடுக்கலாம்.

★ தேவையான விலங்குப் புரத உணவுகளை குறைந்த செலவில் பெறக் கூடியதாக இருக்கும்.

★ மருத்துவ தேவைக்கு சுத்தமான தேனைப் பெறக் கூடிய வாய்ப்பு உண்டு.

★ விறகுத் தேவையையும் ஓரளவு பூர்த்தி செய்ய முடிகின்றது.

மேற்கூறிய பலாபலன்களால் வதிவிட வேளாண்மையை ஓர் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

மேற்படி வதிவிட வேளாண்மையை யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி செய்து அதன் மூலம் மரக்கறிச் செய்கையையும் விலங்கு வேளாண்மையும் ஊக்குவிக்கும் நோக்குடன் விவசாயத் திணைக்களமும், கமநல சேவைத் திணைக்களமும் பல ஆண்டு காலமாக நாடு முழுவதும் வதிவிட வேளாண்மையை ஊக்குவித்து வந்தது.

கடந்த இரண்டு வருட காலமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வதிவிட வேளாண்மைப் போட்டியை அறிமுகப்படுத்தியிருந்தனர். இப்போட்டியில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கு பற்றிப் பலர் பெறுமதிமிக்க நல்ல பரிசில்களையும் தட்டிக் கொண்டனர். கடந்த வருடங்களைப் போல் இவ்வாண்டும் த. பொ. மே. நிறுவனத்தினர் வதிவிட வேளாண்மைப் போட்டியை நடத்த முன்வந்து, அதற்குரிய விண்ணப்பப் படிவங்களையும் விநியோகித்து வருகின்றனர்.

''வதிவிட வேளாண்மை குடும்பத்திற்கு ஓர் ஆசீர்வாதமாகவும் சந்ததிக்கு ஓர் பரிசாகவும் உற்பத்தியாளருக்கு இன்பத்தைப் பயப்பதாகவும் அமையும்.''

திரு. த. சிவலோகநாதன்,
(உதவி விவசாயப் பணிப்பாளரின் விரிவாக்க காரியாலயம்)

★

## பெருமழையால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த தீவக மக்களுக்கு உதவ கோரி அ.அதிபருக்கு மகஜர்

காரைநகர் உட்பட தீவுப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து பல்வேறு முகாம்களில் வாழ்ந்து வரும் மக்கள் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பருவகால மழையால் பெரும் பாதிப்புக்குள்ளாகி பல துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள் என்பதைப் புள்ளி விவரங்களுடன் எடுத்துக்கூறி இவர்களின் அவலங்களைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் யாழ். அரசாங்க அதிபருக்கு சமர்ப்பித்துள்ளது.

சங்கானை, சாவகச்சேரி, நல்லூர் முதலிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மேற்படி இடம் பெயர்ந்தவர்களின் முகாம்களில் வீடுகள் அனைத்தும் ஊறிய நிலையில் உள்ளன எனவும்—

பல முகாம்களில் உள்ள வீடுகள் வேயப்பட வேண்டும் எனவும் —

பல முகாம்களில் அடைப்புகள் போடப்பட வேண்டும் எனவும் —

சரியான மலசலகூட வசதிகள் இல்லாத முகாம்களில் அவற்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும்—

அனைத்து முகாம்களிலும் உள்ளவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் — மகஜரில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## வாழைச்சேனையில் 12 தமிழர் கைது

யாழ்ப்பாணம், டிச. 11

அண்மையில் மட்டக்களப்பு வாழைச்சேனைக்கு அருகில் உள்ள தேற்றாலை, புதுக் குடியிருப்பு, கண்ணன் கிராமம், பண்டிமடு, கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களை இராணுவத்தினர் அதிகாலை 4மணியளவில் சுற்றிவளைத்து வயது வேறுபாடின்றி இருபாலாரையும் கைது செய்தனர்.

கைதானவர்கள் வாழைச்சேனை பொது மைதானத்தில் சோதிக்கப்பட்டு முகமூடிகள் முன் நிறுத்தப்பட்டு இனங்காணப்பட்டனர். பின் 12 பேர் தடுத்து வைக்கப்பட்டனர். (க-த)

## குளம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், டிச. 11

செம்பியன்பற்று தெற்கில் அமைந்துள்ள மருதடிக்குளம், பானையடிக்குளம் ஆகிய இரண்டு குளங்களும் போரூட் நிறுவனத்தால் செம்பியன் பற்று தெற்கு சிக்கன கடன் வழங்க கூட்டுறவு சங்க அங்கத்தவர்களின் அனுசரணையுடன் புனரமைக்கப்பட்டது.

இதனால் அப்பகுதி விவசாயிகள் பலர் நன்மையடைந்துள்ளனர். (த)

## திட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, டிச. 11

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்தும் திட்டத்தை அரசு கைவிட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சந்திரா பண்டாரா இத்தகவலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். (த-எ)

## பூநகரி வெற்றி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளதாவது:-

பூநகரி கூட்டுத்தளம் மீது வெற்றிகரமாக நடந்து முடிந்த 'தவளை' இராணுவ நடவடிக்கையின் ஒருமாத பூர்த்தியை வெற்றி விழாவாக எமது இயக்கம் கொண்டாடுகிறது.

11 ஆம், 12 ஆம், 13 ஆம் திகதிகளில் இந்த வெற்றி விழா எழுச்சிபூர்வமாக அனுட்டிக்கப்படும்.

இந்தத் தாக்குதல் வெற்றியின் அரசியல் - இராணுவ பரிமாணங்களை எமது மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கிலும், இந்த இராணுவ சாதனையின்போது உயிர் நீத்த புலி வீரர்களது வீரத்தையும், தியாகத்தையும் தமிழினம் நினைவுகூரும் வகையிலும், இந்த வெற்றி விழா அமையும்.

பூநகரி வெற்றியின் ஒருமாத பூர்த்தியை தமிழீழ மக்கள் கொண்டாடும் இந்த வேளையில் பூநகரிப் பேரழிவால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து சிங்கள தேசம் இன்னமும் மீளவில்லை.

சிங்கள தேசத்து இராணுவ வரலாற்றில் முதற்தடவையாக ஓர் இராணுவத் தோல்விக்கும், அதில் சிங்களப் படை சந்தித்த பெருநாசத்திற்கும் பொறுப்பேற்று, அதன் இராணுவ ஜெனரல் பதவி விலகவேண்டிய நெருக்கடி சிறிலங்காவில் எழுந்துள்ளது.

*வீரகாவியம்*

'ஆறு மாதத்தில் பிடிக்கிறேன்' 'ஒரு வருடத்தில் முடிக்கிறேன்' என்றவாறாக தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் வாய்ச்சவடால் விடுத்த ஜெனரல் சிசில் வைத்தியரத்னா இன்று ''தோல்வியுறும் இராணுவத்திற்கு தளபதியாக இருக்க விரும்பவில்லை'' என்று விரக்தியுடன் கூறுமளவுக்கு பூநகரியில் புலிவீரர்கள் வீரகாவியம் படைத்துள்ளனர்.

தமிழீழம் என்ற தனியரசை நோக்கிய பாதையில் எமது விடுதலைப் போரை முன்னோக்கி வேகமாக உந்தித் தள்ளியுள்ள இந்த வரலாற்றுத் தாக்குதலில் 458 புலிவீரர்கள் உயிர்த்தியாகம் புரிந்துள்ளனர்.

பலம் வாய்ந்த ஒரு கடற்படைத் தளத்தையும், சக்தி வாய்ந்த ஒரு கவசவாகனப் படைப்பிரிவையும் கொண்ட 2,000க்கும் மேற்பட்ட படையினருடன் சுமார் 25 கி. மீ. பரப்பளவிலான பகுதியில் அமைந்திருந்த பிரமாண்டமான படைத்தளமாக பூநகரி கூட்டுப்படைத் தளம் அமைந்திருந்தது.

*முற்றுகை போரில் பிரதான பாத்திரம்*

குடாநாட்டின் மீது கடந்த இரண்டு வருடங்களில் சிங்களப் படைகள் தொடுத்து வரும் முற்றுகைப் போரில் பூநகரி கூட்டுத்தளம் பிரதான பாத்திரத்தை வகித்து வந்தது. கிளாலி கடனீரேரியூடாக பயணம் போன 300ற்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்ற, கொலைகாரர்களின் இருப்பிடமாகவும் இத்தளமே விளங்கி வந்தது.

குடாநாட்டு மக்களின் உயிர்நாடியை நெரிக்க உதவிய இக் கூட்டுப்படைத்தளம் மீது 11 ஆம் திகதி அதிகாலை தொடக்கம் 13 ஆம் திகதி மாலை வரை புலி வீரர்கள் தொடுத்த பெருந்தாக்குதலின் பின் பூகம்பத்தில் அகப்பட்ட பகுதிபோல இப்படைத் தளம் சிதைந்து விட்டது. அத்துடன் சிங்களப் படைத்துறைத் தலைமை செயற்படுத்தி வந்த போர்முறைத் திட்டமும் தவிடு பொடியாகி விட்டது.

*ரூ 100 கோடி ஆயுதங்கள்*

இத்தளத்திலிருந்த 1000க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். 100கோடி ரூபா பெறுமானமுள்ள ஆயுத தளபாடங்களை படையினர் இழந்துவிட்டனர் என்று கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

சிங்கள இனத்தை சோகத்தில் ஆழ்த்திவிட்ட இப்பெருந்தாக்குதலில் புலிவீரர்கள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் சக்தியும், அவற்றின் எண்ணிக்கையும் எமது இயக்கத்தின் ஆயுத பலத்தை திடீரென அதிகரிக்கச் செய்து விட்டது.

இப்பேராயுதங்களும், அவற்றின் சுடுதிறன்களும் விடுதலைப்போரின் போக்கை தமிழினத்திற்குச் சார்பான வகையில் திசை திருப்பிவிடவல்லது என்பது தமிழினம் மகிழ்ச்சியுடன் உள்வாங்கும் ஒரு செய்தியாகும்.

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

புலிவீரர்களின் அர்ப்பணிப்புக்களால் பெற்றுக்கொள்ளப்படும் இந்தப்பெருவெற்றிகள் தமிழீழம் என்ற உறுதியான இலட்சியப்பாதையில் நிலைநிறுத்தப்படவேண்டும்.

இந்த விடுதலை இலட்சியத்தில் நாம் ஒன்றுதிரண்டு எதிரியின் சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.

இப் பெருவெற்றியில் நாம் பறித்தெடுத்த ஆயுத பலத்துடன், ஆட்பலத்தையும் அதிகரித்து எமது தேசிய விடுதலை இயக்கத்தை பலம் பொருந்தியதாக கட்டியெழுப்புவோம்.

எமது பலம்தான் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும். எமது இளைஞர்களும், இளம் பெண்களும் ஆயுதமேந்தும் போதுதான் எமது பலம் பெருகும்.

எமது பாதுகாப்புக்கு அதுவே ஒரே வழி.

## சுதந்திரக்கட்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கும் ஒரு கட்சியுடன் இணைந்து தொடர் பேரணி மற்றும் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளத் தாம் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளது.

சுதந்திரக்கட்சி நடத்தவுள்ள ஆர்ப்பாட்டப் பொதுக் கூட்டங்களுக்கு இரு நோக்கங்கள் உள்ளன.

ஒன்று - வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும்.

இரண்டாவது—தீர்வு ஒன்றும் கண்ணுக்கெட்டாத கொடிய போர் பற்றி தெற்கில் மக்களுக்கு ஒரு விழிப்பை ஏற்படுத்துவது.

தன்மானமுள்ள எந்தத் தமிழனும் சுதந்திரக் கட்சியின் பேரணிகளில் கலந்துகொள்ள மாட்டான் என்று தமிழ்ப் பிரமுகர் ஒருவர் கூறினார். (ஒ-எ-6)

## மகாபொல...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் எதிர் நோக்கும் பல தரப்பட்ட பிரச்சினைகள் எடுத்துக் கூறப்பட்டன.

மாணவர்களுக்கு தேவையான காகிதாதிகளை கப்பல் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் ஆணைக்குழுத் தலைவர் உறுதியளித்துள்ளார். (க-3)

## 188 பயணிகளுடன் கோமாரி வந்தது

வடமராட்சி, டிச. 11

கோமாரிக் கப்பல் 188 பயணிகளுடன் கடந்த வியாழனன்று பருத்தித்துறையை வந்தடைந்தது.

பல்கலைக் கழக மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் இக்கப்பலில் வந்தனர்.

இந்தக் கப்பலில் உணவுப் பொருள்கள் எவையும் எடுத்து வரப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கப்பல் 50 பயணிகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலைக்கு திரும்பிச் சென்றது.

(இ-3-173-109-15)

## பத்தாயிரம் ரூபா அன்பளிப்பு

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கு இக்கல்லூரி பழைய மாணவனும் வடமாநில கல்விப் பணிப்பாளருமாகிய இரா. சுந்தரலிங்கம் ரூபா பத்தாயிரம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (க-117)

**கனிவளம் பெருக்கி பிணிதனை குறைப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சுவாமிநாதன் குமாரசுவாமி

(இளைப்பாறிய ஆசிரியர்)

சுவாமிநாதன் குமாரசுவாமி (இளைப்பாறிய ஆசிரியர்) 10 - 12 - 1993 வெள்ளிக்கிழமை காலை சிவபதமெய்திவிட்டார்.

இவர் சுந்தராம்பாளின் (துரை அம்மா) அன்புக் கணவரும், சுவாமிநாதன் (சிறாப்பர் நகரசபை, புத்தளம்), ஜெயபாலன் (சிறாப்பர் நகரசபை, கொழும்பு), சாந்தாதேவி, சரோஜினிதேவி (பாப்பா), கிரிசாம்பாள் (ராதா), ஜெயச்சந்திரன் ஆகியோரின் தகப்பனாரும், சடாச்சரதேவி, விஜயநந்தினி, காலஞ்சென்ற மகேஸ்வரன், மகேந்திரன் (இலங்கை வங்கி, கொழும்பு), நாகேஸ்வரன் (கொழும்பு), நிர்மலா ஆகியோரின் மாமனாரும், பிரதீபா, புஸ்பா, செந்தூரன், பிரசாத், வினோத், அருணன், கல்யாணி, ஸ்வர்ணா, பிரசன்னா, தர்ஷிகா, அனந்தன், ஹரேந்திரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-12-93) சனிக்கிழமை காலை 10-00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருபாலை செக்கடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சுந்தராம்பாள் (துரை அம்மா)
(மனைவி)

இருபாலை சந்தி,
இருபாலை. [28366]

## திரு. ஏ. சி. கந்தசாமி

(ஓய்வுபெற்ற மாகாண தபால் அத்தியட்சகர்)

அம்பலவாணர் கந்தையா கந்தசாமி அவர்கள் 10-12-93இல் காலமானார். அன்னார் காலம் சென்ற கந்தையா - தவபாக்கியலெச்சுமி தம்பதிகளின் மகனும், தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், கோகிலகுமாரி, குகதாசன் (ஜேர்மனி) கணேசதாசன் (கனடா) காலஞ் சென்ற கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கராஜா, காலஞ்சென்ற நாகராஜா (உதவி அ. அ.) வேலாயுதபிள்ளை மனோன்மணி ஆகியோரின் சகோதரரும், கதிரவேலு, சிவக்கொழுந்து, முருகையா வள்ளியம்மை, நாகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (11-12-93) சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
மனைவி

75, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (28371)

## பொன்னையா சிவசம்பு

மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா சிவசம்பு நேற்று (10-12-1993) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும், தங்கமுத்துவின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், செல்வநாயகி, பகவதிப்பிள்ளை, பாலசிங்கம் (நோர்வே), பாலச்சந்திரன் (அரசினர் வைத்தியசாலை. சாவகச்சேரி). பாலதுரை (ஜேர்மனி), செல்வநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11-12-93) சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் கீழ் காணும் முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி சி. தங்கமுத்து
(மனைவி)

நுணாவில்-கல்வயல் வீதி,
(சண்முகானந்த வித்தியாசாலை அருகில்)
கல்வயல், சாவகச்சேரி. (28383)

## திருமதி கந்தையா தங்கரெத்தினம்

திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த கந்தையா தங்கரத்தினம் 10-12-93 இல் காலமானார்.

அன்னார் சின்னையா கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரையப்பா, இராசரத்தினம், செல்வரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நித்தியாநந்தன், ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி, ஊர்மிளாதேவி, பத்மலோஜினி, சச்சிதாநந்தன், பிரமாநந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இலங்கைநாயகம் லக்கினேஸ்வரி, பாலபுங்கம், கிருஷ்ணதாஸன், பாலச்சந்திரன், வசந்தாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
சி. கந்தையா
(கணவன்)

தாளையடி லேன்,
திருநெல்வேலி. (28387)

## தம்பையா தியாகராஜா

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கல்வியங்காட்டில் வசித்தவருமாகிய தம்பையா தியாகராஜா 10 - 12 - 93 இல் காலமானார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாவதி (B. A.), பத்மதேவி (கணனி இயக்குனர் - கொழும்பு), தயானந்தம் (ஓவியர், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர்), மாலதி, கருணாகரன் (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி), நகுணா (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி), தனம் (யாழ். மத்திய கல்லூரி), கணநாதன் (போராளி), கமலநாதன் (யாழ். மத்திய கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வராஜன் (சதாஸ் மோட்டோர்ஸ் உரிமையாளர் - யாழ்ப்பாணம்), பார்த்தீபன் ஆகியோரின் மாமனாரும், சங்கீதாவின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (11 - 12 - 93) இரண்டு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. தயானந்தம் (மகன்)

'இலட்சுமி பவனம்'
3 ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (28385)


# கலை வர்த்தகக் கல்லூரி

## C. C. A.

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

## A/L 94 DAY CLASSES

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. உதயன் |
| கணக்கியல்:- | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம்:- | திரு. இரட்ணம் |
| அளவையியல்:- | திரு. சயந்தன் |
| புவியியல்:- | திரு. வேலாயுதபிள்ளை |
| இந்துநாகரிகம்:- | திரு. ஜோதீஸ்வரன் |

ஆரம்பம்: **14 - 12 - 93**

குறிப்பு:
1. மாணவர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது முற்கூட்டியே பதிவு செய்து இலக்கத்தைப் பெற்றுக் கொண்டு அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
2. புதன் தவிர்ந்த ஏனைய 6 நாட்களும் விதிகளுக்கு இணங்கிய நேர அட்டவணையின் பிரகாரம் வகுப்புக்கள் நடைபெறும்.
3. A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு மட்டும் கோட்பாடு, வினா விடை, பயிற்சி வகுப்பு என்பன நடைபெறும்.

— நிர்வாகி

(C/6595)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## கணபதிப்பிள்ளை இராஜகோபால்

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி மதிவதனா சுகுமார் அவர்களின் தந்தையார் திடீரென இவ்வுலகை விட்டு ஏகியமை எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அன்னாரின் பிரிவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அவரை இழந்து துயருறும் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"வேலணை சைவப்பிரகாசம்"

58/48, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம. (28384)

# கண்ணீர் அஞ்சலி

## உயர்திரு. ஏ. சீ. கந்தசாமி

அஞ்சல் திணைக்கள முன்னாள் கட்டுப்பாட்டாளர்


உயர்திரு. ஏ. சீ. கந்தசாமி

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலிகள்

யாழ். மாவட்ட அஞ்சல்
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்

[28382]

# ஓராண்டு நினைவலை



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28 | 22 |
| — | — |
| 08 | 11 |
| — | — |
| 1908 | 1992 |

## வயிரமுத்து தர்மலிங்கம்

அன்பின் சிரம் சாய்ந்து ஓராண்டானதன்றோ
ஓராண்டென்ன ஓராயிரமாகட்டும்
அணையாத ஜோதி உங்கள் முகம் எம் முன்னே
உங்கள் அன்பின் சுவடுகளில் எம் இதயங்கள்
துடித்திருக்கும்
அன்பால் விலங்கிட்டு அசையாமல் போனதெங்கே
ஆசையுடன் விழிகள் நின் எழிலுருவம் தேடுதிங்கே.
உங்கள் ஆத்ம சாந்திக்கு கண்ணீர் பூக்கள் காணிக்கை

நீங்கா நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

ஊரெழு. (C/6697)

# மரண அறிவித்தல்

திருமதி

## அதிசயரட்ணம் கணேசநாதன்

உடுவில்

திருமதி அதிசயரட்ணம் கணேசநாதன் காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா கணேசநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசரட்ணம் றோசம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற துரைராசா, தேவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (11 - 12 - 93) 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கணேசநாதன்
(கணவர்)

மானிப்பாய் வீதி,
உடுவில். (28391)

## இன்று

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம தயாரித்து வழங்கும் இசை ஆரம் என்ற இன்னிசை நிகழ்ச்சி இன்று சனி காலை 9 மணிக்கும், பிற்பகல் 2. 30 மணிக்கும் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (ந)

★ ★ ★

நான் சஞ்சிகையினர் நடத்தும் உளவியல் ஆய்வரங்கு இன்று சனிக்கிழமை மாலை 4 மணி முதல் 5. 30 மணி வரை ஆரியகுளம் சந்திக்கருகில் உள்ள எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் ''வெளிப்பாட்டு சிகிச்சை முறை'' என்ற தலைப்பிலான அறிவியல் கருத்தரங்கு ஒன்று இன்று சனி காலை 10 மணிக்கு ஆனைக்கோட்டையில் உள்ள மானிப்பாய் கிராம பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு த. சிதம்பரநாதன் கருத்துரை வழங்குவார். (த-90)

## ஆலயங்களில்

சுன்னாகம் ஸ்ரீசந்திரசேகர விநாயகர் மண்டலாபிஷேக பூர்த்திவிழா இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (க-89)

★ ★ ★

பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்க்கப்பட்டதன் வெற்றி விழாவை ஒட்டி வண்ணை பெருமாள் ஆலயத்தில் இன்று முதல் 3 நாட்களிலும் நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை நடைபெறும்.

(க 15-162)

### வீதி விளக்கு

பருத்தித்துறை நகரத்திலும் வீதி விளக்குகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

முதற்கட்டமாக நகரின் முக்கிய இடங்களில் 10 விளக்குகளை அமைக்க பருத்தித்துறை நகரசபை திட்டமிட்டுள்ளது. (+ 173)

### சனசமூக நிலையம்

திருநெல்வேலி சிவன் கோவில் அன்னதான மடத்தில் சனசமூக நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்காவுடன் பேச்சு நடத்திய தாகவும் —

ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயப் பகுதி மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று தாம படையினருக்கு பணிப்புரை வழங்கியதாக ஹமில்டன் தெரிவித்ததாகவும்— யாழ். அலுவலக அதிகாரி பியட் சுவல்லர் தெரிவித்தார்

இதேவேளை நேற்று முதல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் இரவில் யாழ். ஆஸ்பத்திரியில் பணிபுரிய ஏற்பாடாகி உள்ளது. (அ-3)


# பாராட்டுதல்கள்

A/L 93 பரீட்சையில் 4A பெற்று மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் அகில இலங்கையில் 6 வது இடத்தையும் பெற்ற எமது நிறுவன மாணவன்

செல்வன்

## ஜே. ஜெகச்செல்வம்

(ஹாட்லிக் கல்லூரி)

அவர்களையும்

செல்வன்

## திரேஸ்குமார்

(3A. B)
(ஹாட்லிக் கல்லூரி)

செல்வி

## கௌரி

(A, 3C)
(கலைப் பிரிவு)

ஆகியோரையும் ஏனைய உயர் பெறுபேறுகள் பெற்ற மாணவர்களையும் இவர்களின் மேன்மைக்கு உறுதுணை செய்த எமது நிறுவன ஆசிரியர்கள், கல்லூரிகள், பெற்றோர்களுக்கும் எமது பாராட்டுதல்கள் உரித்தாகுக,

S. K, பிரபாகரன்
நிர்வாகி

N C A,
ஆத்தியடி,
பருத்தித்துறை.
(சி/6691)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 29 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-12-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மரண அறிவித்தல்கள்

## இராசமணி செல்லையா

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இராசமணி செல்லையா காலமானார்.

இவர் காலம்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலம் சென்ற பகவதி இராசதுரை, காலம் சென்ற கனகம்மா ஆறுமுகம், இராசுபரமலிங்கம், காலம்சென்ற சரஸ்வதி நாகலிங்கம், கணேசன், குமரேசன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சீதா குமரேசன்

நாமகள் வாசம்,
ஆனைக்கோட்டை. (சி/6694)

## கணபதிப்பிள்ளை இராஜகோபால்

வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராஜகோபால் 10-12-93 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலம்சென்ற அருளம்பலம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருவருட் செல்வியின் அன்புக் கணவரும், மதிவதனா (ஆசிரியை யா/ வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), மதிகரன் (பிரான்ஸ்), ஜெயகாந், றஜிவதனா, சிறிகரன், பாலகரன், ஜெயவதனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகுமாரின் அன்பு மாமனாரும் நவரத்தினம்மா, நாகநாதபிள்ளை, விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம், பேரின்பநாயகம், இரத்தினசிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், கந்தவேள், தணிகாசலம், செல்வரட்ணம், செந்தமிழ்ச் செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12-12-93) அவரது இல்லத்தில் (ஸ்ரேசன் றோட் கொக்குவில்) நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காலை 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
திருமதி க. இராஜகோபால்

அகிம்சகிரி,
கொக்குவில். (28388)

## ஆறுமுகம் சின்னப்பிள்ளை

ஆறுமுகம் சின்னப்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற ஆறுமுகத்தின் மனைவியும், காலஞ்சென்ற இரத்தினம் (ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர்) அருளம்மா, தங்கலட்சுமி, குணரத்தினம் (ஓய்வு பெற்ற மாநகர சபை உத்தியோகத்தர்) தேவராசா (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்) சண்முகநாதன் (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), பவளம்மா, மலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்ற சின்னத்துரை, இராசையா (இளைப்பாறிய புகையிரத உத்தியோகத்தர்) இராசம்மா, மகேஸ்வரி, ஜெயராணி, மகேந்திராதேவி, பரஞ்சோதி (பொது முகாமையாளர் யாழ். ப. நோ. கூ. சங்கம்), நவரட்ணம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று 11-12-93 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மலர் மகள் வீதி அரியாலை இல்லத்திலிருந்து அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
ஆ. குணரத்தினம்
(மகன்)

9/6, மலர் மகள் வீதி,
அரியாலை. (28390)

## வல்லிபுரம் சதானந்தசிவம்

(சேதமருந்தாளர் அரசினர் வைத்தியசாலை, வவுனியா)

சிவன்கோவிலடி, வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் சதானந்தசிவம் 09 12-93 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் பேரின்பநாயகியின் (போதனாசிரியர் தொலைக்கல்வி, பருத்தித்துறை. ஆசிரியை வட்டு. இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், சரளா (பல்கலைக் கழகக் கல்லூரி, குளியாப்பிட்டியா) வல்லிபுரசத்தியசாயி (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம்), மோசனராம், சிவசாயி கோகுலராம் (மாணவர்கள் வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி குமாரசாமி வரதலட்சுமியம்மா, திருமதி தியாகராசா திரிபுரசுந்தரி உமாபதிசிவம் (இளைப்பாறிய ஆசிரியர்), யோகானந்தசிவம் (அதிபர் வட்டு.சுப்பிரமணிய வித்தியாசாலை), தயாபரசிவம் (முன்னாள் மன்னார் நெல் சந்தைப்படுத்தும் சபை தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சி. அருணகிரிநாதன் (காணி உத்தியோகஸ்தர் நுணுக்காய்), திருமதி பொன்னையா நறுமலர் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சிவன்கோவிலடி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையிலுள்ள இல்லத்தில் இன்று (11-12 1993) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நவாலி வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. உமாபதிசிவம்
(சகோதரர்)

சிவன்கோவிலடி,
வட்டு. மேற்கு. (28389)

## செல்லத்துரை நவரத்தினம்

(பட்டுமாமா)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தாவடி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நவரத்தினம் (முகாமையாளர், கிறெஸ்ட் எம். என். எஸ். அன்ட் கம்பனி, கண்டி) அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சதானந்தன், சதீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 6 - 12 - 93 அன்று கண்டியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. செந்தில்நாதன்

566, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (28386)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org